RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# கூத்தராற்றுப்படையில் உணவுப் பழக்கவழக்கங்கள்

கை.தங்க அமிர்தலெட்சுமி [அ, *], ஜா. சாந்திபாய் [அ]

[அ] தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றாது) திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

# Food habits in the Koothatharatrupadai

K. Thanga Amirthalakshmi. [a, *], J. Santhi Bai [a]

[a] Department of Tamil, Sarah Tucker College (Autonomous),( affiliate to Manonmaniam Sundaranar University) Tamil Nadu, India

* Corresponding Author: amirthalakshmitvl@gmail.com

Received: 18-04-2024
Revised: 23-06-2024
Accepted: 02-07-2024
Published: 31-07-2024

Check for updates

**ABSTRACT**

Food is one of the essential needs of all the people of the world. It cannot be avoided. Food is essential for human survival. The uses of food vary from country to country, land and situation, but their importance does not change. Ancient people divided everything like profession, deity, drum, flower and tree according to their land. Similarly, individual meals have been prepared for them. News about the food habits and food habits of such people are found in gossip. The aim of this article is to investigate it.

**Keywords:** Ancient Tamils, Food Systems, Five Types of Discrimination, Food Habits

## முன்னுரை

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகவும், மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையாகவும் கருதப்படுவது உணவு ஆகும். பண்டைய மனிதன் உயிர் வாழ்வதற்காக முதலில் உடையையோ, இருப்பிடத்தையோ தேடவில்லை உணவினையேத் தேடினான். அவனது முதல் தொழிலே உணவுத்தேடல்தான். கற்காலம் முதல் இன்றுவரை நாகரிக வளர்ச்சியினால் உணவு உண்ணும் முறைகள் மாறியுள்ளதே தவிர உணவிற்கான முக்கியத்துவம் குறையவில்லை. தமிழ் இலக்கியங்கள் மிகவும் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள் ஆகும். அவை பதிவிடாத செய்திகளே இல்லை. பண்டைய மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலித்து காட்டும் காலக் கண்ணாடியாக இலக்கியங்கள் விளங்குவதால், நமது முன்னோர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினை நடத்தியுள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. அத்தகைய இலக்கியங்களில் ஒன்றான ஆற்றுப்படை இலக்கியங்களுள் கூத்தராற்றுப்படையில் காணப்படும் உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உணவு

மனிதனின் அடிப்படைத் தேவைகள் மூன்று, “உணவு, உடை, உறையுள்” ஆகும். உலகில் மனிதன் நிலைப்பெற்று உயிர் வாழ உணவு மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆதிகால மனிதன் முதலில் இயற்கையாக விளைந்த காய்கனிகளையும், கிழங்குகளையும் உண்டான். அதன்பின்

பறவைகள், விலங்குகள் முதலியவற்றை வேட்டையாடி உண்டான். முதலில் பதப்படுத்தாமலும் பின்னர் பதப்படுத்தி, பக்குவப்படுத்தியும் உண்ணத் தொடங்கினான். அவனது ஆராய்ச்சியும், அறிவும் வளர வளர உணவு முறைகளில் பலவித மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. உணவு செய்யும் முறைகள் மாறியதே தவிர உணவிற்கான முக்கியத்துவம் குறையவில்லை.

## ஐந்திணை பாகுபாடும் உணவு வகைகளும்

பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை இலக்கியங்கள் மட்டுமின்றி இலக்கண நூல்களும் வெளிப்படுத்துகின்றன. சங்க கால மக்கள் ஐந்து வகையான திணை அமைப்பினைக் கொண்டு வாழ்ந்துள்ளனர். இதனை,

"குறிஞ்சி பாலை முல்லை மருதம்

நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே" (அகப்பொருள் விளக்கம் - 6)

என்று அகப்பொருள் விளக்கம் கூறுகிறது. தொல்காப்பியர் நான்கு நிலங்களை மட்டுமே வரையறுத்து கூறியுள்ளார். அதன்பின் தோன்றிய அகப்பொருள் விளக்கம் ஐவகை நிலங்களைச் சுட்டுகிறது. நம் முன்னோர்கள் நிலங்களைப் பிரித்ததோடு மட்டுமல்லாமல் அவைகளுக்கென்று முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்று பொருள்களைச் சுட்டியுள்ளார்கள்.

முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆகும். கருப்பொருள் என்பது முதற்பொருளை அடிப்படையாக கொண்டு பிறக்கும் பொருள்கள் ஆகும். இதனை தொல்காப்பியம்,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப" (தொல்காப்பியம் - அகத்திணையியல் - 20)

தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, யாழ் என்ற 7 பொருட்களைச் சுட்டுகிறது. அகப்பொருள் விளக்கம் 14 கருப்பொருள்களைச் சுட்டுகிறது.

"ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு

ஊர்நீர் பூமரம் உணாபறை யாழ்பண்

தொழில்எனக் கருஊர் எழுவகைத்து ஆகும்" (அகப்பொருள் விளக்கம்- அகத்திணையியல் - 19)

தெய்வம், உயர்ந்தோர், அல்லோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் ஆகிய பதினான்காகும். இவைகள் முதற்பொருளாகிய நிலத்தையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிறக்கும். ஐவகை நிலத்திற்கும் இயற்கையாக அமைந்தவை ஆகும் மேலும் இக்கருப்பொருள்கள் திணைக்கு ஏற்ப மாறுபடும்.

உரிப்பொருள் என்பது அவ்வவ் நிலத்திற்குரிய உயர்ந்த மக்களிடம் காணப்படும் உயர்ந்த ஒழுக்கலாறுகள் அல்லது பண்புகள் ஆகும்.

நமது முன்னோர்கள் உணவினை ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப வகைப்படுத்தியுள்ளார்கள்.

- குறிஞ்சி நிலம் - மலைநெல், மூங்கிலரிசி, தினை
- பாலை நிலம் - வழியிற் பறித்த பொருள்
- முல்லை - வரகு, சாமை, முதிரை
- மருதம் - செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி
- நெய்தல் - மீனும், உப்புக்கு விற்ற பொருள்

சங்க கால மக்கள் அந்தந்த நிலத்தின் தன்மைக்கேற்பவே உணவினை அமைத்துக் கொண்டனர். அவர்கள் தம் நிலத்தில் கிடைத்த உணவுகளையும், பண்டமாற்றுக்குக் கிடைத்த உணவுப் பொருட்களையும் உண்டு வந்துள்ளனர். சங்க கால மக்களின் உணவு பற்றி தேவநேயபாவாணர் "உலகில் முதன் முதல் உணவை நாகரிகமாய்ச் சமைத்துண்டவன் தமிழனே. ஏனைய நாட்டாரெல்லாம், தம் நாட்டில் விளைந்த உணவுப் பொருள்களைப் பச்சையாகவும் சுட்டும் வெறுமையாய் அவித்தும் உண்டுவந்த காலத்தில் உணவைச் சோறும் கறியும் என இரண்டாக வகுத்து, நெல்லரிசியைச் சோறாகச் சமைத்தும், கறி அல்லது குழம்பு வகைகளை, சுவையூட்டுவனவும் நோய் வராது தடுப்பனவுமான பலவகை மருந்துச் சரக்குகளை உசிலை (மசாலை)யாகச் சேர்த்து ஆக்கியும், உயர்வாக உண்டு வந்த பெருமை தமிழனதாகும்" (பக்க எண் - 42) என்று கூறுகிறார்.

## உணவின் சிறப்பு

மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படை உணவாகும். உணவு குறித்தும், உணவினுடைய முக்கியத்துவம் குறித்தும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. உணவு என்பது மனிதருக்கு இன்றியமையாத ஒன்று என்று,

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே

நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறநானூறு - 18)

புறநானூறு கூறுகிறது. உணவெனப்படுவது நிலத்தோடு நீராகும். நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது, உணவையே முதன்மையாகவும் உடையது. உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்ததற்கு சமம். எனவே உணவு இன்றேல் மனிதனால் உயிர் வாழ இயலாது என்று புறநானூறு கூறுகிறது.

பசியினால் வாடுபவருக்கு உணவளித்தல் என்பதை அறம் என்று போற்றுகிறார் திருவள்ளுவர்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவர்

பெற்றான் பொருள் வைப்புழி" (திருக்குறள் - ஈகை - 226)

ஏழைகளின் பசித்துன்பத்தை நீக்கும் அறமே சிறந்த அறம் என்றும், அதுவே செல்வத்தைச் சேமிக்கும் வழி ஆகும் என்று திருக்குறள் கூறுகிறது. இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையோ 'பசி'யைப் பிணியாகவும் பாவியாகவும் சுட்டுகிறது.

உணவின்றி பசியினால் வாடுபவனுடைய நிலையை ஔவையார் தனது பாடலில் எடுத்துரைக்கிறார்.

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை

தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை - தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்

பசிவந்திட பத்தும் பறந்துபோம்" (நல்வழி - 26)

மானம், குடிப்பெருமை, கல்வி, கொடை, அறிவுடைமை, தானம், தவம், பெருமை, தொழிலில் முயற்சி, பிற மங்கையர்மீது விருப்பம் கொள்ளுதல் ஆகிய பத்தும் பசி வந்தால் போய்விடும். பாரதியார்,

"தனியொ ருவனுக் குணவிலை யெனில்

ஜகத்தினை யழித்திடுவோம் - வாழ்க" (பாரதியார் கவிதைகள் - பாரத சமுதாயம் - 2)

தனி நபர் ஒருவருக்கு உண்ண உணரவில்லை என்றால், இவ்வுலகத்தை அழித்து இல்லாமல் செய்வோம் என்று பாடியிருக்கின்றார்.

உணவு இன்றேல் மனிதனால் வாழ இயலாது என்பதையும், உணவினுடைய முக்கியத்துவத்தையும் நம் முன்னோர்கள் நன்கு அறிந்துள்ளார்கள். நமது தமிழர்கள் தான் மட்டும் வாழாது பிறருக்கும் கொடுத்து வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்துள்ளார்கள் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

## கூத்தராற்றுப்படை

ஆற்றுப்படை என்பது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். ஆற்றுப்படுத்துதல் என்பதற்கு வழிப்படுத்துதல் என்பது பொருளாகும். பரிசில் பெற்று வரும் பாணன், கூத்தன், விறலி முதலியவர்கள் பரிசில் பெற விரும்பும் பாணன், கூத்தன், விறலி ஆகியோரை வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படை ஆகும்.

"ஏந்திச்சென்ற இரவலன்

கூத்தரை ஆற்றுப்படுத்தன்று" (புறப்பொருள் வெண்பாமாலை - 217)

பரிசில் பெற்றுச் செல்லும் ஒரு கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துவது கூத்தராற்றுப்படை என்று புறப்பொருள் வெண்பாமாலை இலக்கணம் கூறுகிறது. கூத்தர்கள் பற்றி 'சங்கத் தமிழ் நூல்கள்' என்பதில் "இயல், இசை, நாடகம் எனத் தமிழ் முத்திறத்தது. இயற்பகுதியைப் புலவரும், இசைப் பகுதியைப் பாணரும், நாடகப் பகுதியைக் கூத்தரும் வளர்த்து வந்தனர். புலவராவார் நல்லிசைப் புலமை சான்றோர், பாணராவார் இசை, பாடுவதிலும், யாழ்வாசிப்பதிலும் வல்ல ஒரு வகை வகுப்பினர். கூத்தராவார் எண் வகைச் சுவையும் மனிதன் கண்பட்ட குறிப்புகளும் புறத்துப் புலப்படுமாறு ஆடுதலில் வல்லவர்" (பக்கம் எண் - 118) என்று ஆதிரையார் குறிப்பிட்டுள்ளார். கூத்தராற்றுப்படையை 'மலைபடுகடாம்' என்றும் வழங்குவர். பாட்டுடைத் தலைவன் நன்னன். இவன் வேளிர் குலத்தைச் சேர்ந்தவன். நன்னன்சேய் நன்னனிடமிருந்து பரிசில் பெற்றுத் திரும்பும் கூத்தன், பாணர்கள், விறலியர்களோடு பல வகை வாத்தியங்களையும் சுமந்து கொண்டு வறுமையினால் வள்ளலைத் தேடிச் செல்லும் கூத்தரை ஆற்றுப்படுவதாக அமைந்த பாடல் கூத்தராற்றுப்படை ஆகும்.

## கூத்தராற்றுப்படையில் உணவு பழக்கவழக்கங்கள்

உணவு பழக்க வழக்கங்கள் திணைகளுக்குத் திணை மாறுபட்டுள்ளது. உணவு என்பதற்கே பலவகையான பெயர்கள் இருந்துள்ளது என்பதை பிங்கலம் சுட்டுகிறது.

"உணாவே வல்சி யுண்டி யோதன

மசனம் பதமே யிரையா கார

முறையே யூட்ட முணவென லாகும்" (பிங்கலம் -1153)

உணா, வல்சி, உண்டி, ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம், உறை, ஊட்டம் என்ற பல பெயர்களைக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு நிலத்து மக்களுக்கும் தனித்த அடையாளங்கள் இருந்துள்ளது. அவர்கள் தனக்கென ஒரு உணவு பழக்க வழக்கங்கள், தொழில்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை கொண்டிருந்திருந்தாலும் விருந்தோம்பல் என்ற பண்பில் ஒன்றுப்பட்டு வாழ்ந்துள்ளார்கள் என்பதை சங்கப்பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. உணவை தான் மட்டும் உண்ணாது அனைவருக்கும் பகிர்ந்து உண்ணும் உயரிய பழக்கத்தை கொண்டிருந்தனர். மேலும் தன்னை நாடி வருபவர்களுக்கு முகம் கோணாது விருந்தளிக்கும் தன்மையைப் பெற்றிருந்தனர். மலைபடுகடாம் என்பது ஆற்றுப்படை இலக்கியமாக இருப்பினும் அதில் அம்மக்களுடைய விருந்தோம்பும் பண்பு,

உணவு வகைகள், உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. நன்னனுடைய மலைநாட்டிற்குச் செல்கின்ற வழிகளில் உள்ள குறிஞ்சி, முல்லை மற்றும் மருத நிலங்களில் கிடைக்கப்பெறும் உணவுகள் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன.

## நன்னனின் நாட்டில் விளைந்த பொருட்கள்

நன்னன் வேண்மானின் தலைநகரம் செங்கண்மா ஆகும். செல்லுகின்ற வழிகள்தோறும் பலவித மரங்கள், வளங்கள் என இயற்கை வளம் பொருந்தியது இவனது மலைநாடு. முற்றிய புதுவருவாய் உடைய பழமை வாய்ந்த ஊராகும். வானைத் தொடும்படியான உயர்ந்த மதில்கள் இருக்கும். நன்னனின் நாட்டில் முசுண்டைக் கொடிகள் படர்ந்திருக்கும். எள் செடிகள், தினை, அவரை, வரகு, ஐவன நெல் வகைகள், வெண்ணெல் வகைகள், கரும்புகள், இஞ்சி, கவலைக் கிழங்கு, வாழை மரங்கள், காற்றில் உதிர்ந்த கரிய நாவல் பழங்கள் ஆகியன செல்கின்ற வழிகளில் இருந்துள்ளமையை மலைபடுகடாம் கூறுகிறது. நெய்தல் மலர்கள், உயவைகொடி, கூவைக் கிழங்குகள், மாமரங்கள், உள்ளே உள்ள கொட்டைகள் நீங்கி சிதறிய நீண்ட அடியுடைய ஆசினிப் பலாமரங்கள் இருந்தன. பாணர் கூட்டம் முழவு முதலான இசைக்கருவிகளை சுமப்பது போல பலாப் பழங்களைத் தாங்க முடியாமல் சுமந்து கொண்டிருந்தது பலாமரங்கள். இத்தகைய புதுவருவாயை உடையது நன்னனின் ஊர். அவனது நாட்டிற்கு செல்கின்ற வழிகள்தோறும் பலவித உணவுப் பொருட்கள் விளைந்து வளம் மிகுந்து காணப்பட்டுள்ளமையை மலைபடுகடாம் படம்பிடித்துக் காட்டுகின்றது.

## குறிஞ்சி நில உணவு

குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலை சார்ந்த இடத்தையும் குறிக்கும்.

“விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்

குறத்தி கொடிச்சி குறவர் கானவர்

குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி” (அகப்பொருள் விளக்கம் - அகத்திணையியல் - 20(1-3))

குறிஞ்சி நில மக்கள் கானவர்கள், குறவர்கள்; என அழைக்கப்பட்டனர். அம்மக்கள் இருந்த ஊர் சிறுகுடி எனப்படும். நன்னனின் நாட்டிற்கு செல்கின்ற வழியில் சிறுகுடி என்ற ஊர் உள்ளது. அங்கு செல்கின்றவர்களுக்கு கிடைக்கப்பெறும் உணவு வகைகள்,

“தேனினர் கிழங்கினர் ஊனார் வட்டியர்

சிறுகட் பன்றிப் பழுதுளிப் போக்கிப்

பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்

தூவொடு மலிந்த காய கானவர்

செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே

இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்” (கூத்தராற்றுப்படை - 152 - 157)

கானவர்களின் சிறுகுடியில் தேன் மற்றும் கிழங்குகளை கானவர்கள் உண்டனர். தேன், கிழங்கு, பன்றியின் தசை முதலியவற்றை வட்டிலில் வைத்து உறிக்கட்டி சுமந்து சென்றனர். அவ்வாறு சுமந்து சென்ற உணவுகளையே கூத்தர் முதவியவர்களுக்கும் அளித்துள்ளார்கள். சிறுகுடியிற்கு அடுத்து படுகர் இனமக்களின் பாக்கம் உள்ளது அங்குள்ளவர்கள் நெய் ஊற்றிச் சமைத்த தசைப்பொரியலையும், தினையரிசிச் சோற்றையும் உண்பார்கள். அதனை பாணர்கள் தனது சுற்றத்தாருடன் உண்ணலாம். தினையரிசி என்பது குறிஞ்சி மக்களின் உணவு ஆகும். இதுமட்டுமன்றி குறமகள் சமைத்த புளி மோர்க் குழம்பு, மூங்கிலரிசிச் சோறு முதலிய உணவினையும் கூத்தர்கள் உண்டுள்ளார்கள். இதன் மூலம்

குறிஞ்சி நில மக்கள் தினையரிசி, தேன், கிழங்குகள், தசைகள் முதலியவற்றை உணவாக உட்கொண்டனர் என்பது புலனாகிறது.

## முல்லை நில உணவு

முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த இடத்தையும் குறிக்கும்.

“நெடுமால் குறும்பொறை நாடன் தோன்றல்

வடுவில் கற்பின் மனைவி கிழத்தி

இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்” (அகப்பொருள் விளக்கம் - அகத்திணையியல் - 22(1-3))

முல்லை நில மக்கள் இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் என அழைக்கப்பட்டனர். அம்மக்களுடைய ஊர் பாடி எனப்படும். நன்னனின் நாட்டிற்கு செல்கின்ற வழியில் சிறுகுடி என்ற குறிஞ்சி நிலம் உள்ளது. அதற்கு அடுத்தாற்போல் உள்ள இடம் முல்லை நிலம் ஆகும். அங்கு செல்கின்றவர்களுக்குக் கிடைக்கப்பெறும் உணவு வகைகள்,

“தலையிறும்பு கதழும் நாறுகொடிப் புறவின்

வேறுபுலம் படர்ந்த ஏறுடை இனத்த

வளையான் தீம்பால் மிளைசூழ் கோவலர்” (கூத்தராற்றுப்படை - 407 - 409)

முல்லை நில மக்களின் தொழில் ஆநிரை மேய்த்தல் ஆகும். எனவே முல்லை நிலத்திற்குச் செல்லும் கூத்தர் முதலானவர்களுக்கு பசுக்களின் இனிய பாலை இடையரின் பெண்கள் பருகத் தருவார்கள்.

“பல்யாட் டினநிரை எல்லினர் புகினே

பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்” (கூத்தராற்றுப்படை - 416 - 417)

அவர்கள் தங்களுக்காக வைத்திருக்கும் பாற்சோறும் வெண்ணெயையும் விருந்தினருக்கு அளிப்பார்கள். இவை மட்டுமன்றி கிழங்குகள், தசைகள் ஆகியவற்றை வேடர்களின் இருப்பிடத்தில் கிடைக்கும். மூங்கிலரிசி, நெல்லரிசி இரண்டையும் புளியால் விரவி செய்த புளிங்கூழ் குடிசைகள்தோறும் கிடைக்கும். மலைபடுகடாம் குறிப்பிடும் முல்லை நிலத்து மக்கள் பாற்சோறு, வெண்ணெய், வேட்டையாடி கிடைத்த தசைகள் முதலியவற்றை உண்டிருக்கின்றனர் என்பதை இப்பாடலடிகள் அறிய தருகின்றன.

## மருத நில உணவு

மருத நிலம் என்பது வயலும் வயல் சார்ந்த இடம் ஆகும்.

“இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்

கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி

உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்” (அகப்பொருள் விளக்கம் - அகத்திணையியல் - 23(1-3))

மருத நில மக்கள் உழவன், உழத்தியர், கடையர், கடைச்சியர் என அழைக்கப்பட்டனர். இவர்களின் ஊர் பேரூர், மூதூர் ஆகும். நன்னனின் நாட்டிற்குச் செல்கின்ற வழியில் மருத நிலம் அமைந்துள்ளது. அதனை கடந்து செல்கின்ற கலைஞர்களுக்குக் கிடைக்கப்பெறும் உணவுப் பொருள்கள் குறித்து இப்பாடல்வரிகள் எடுத்துரைக்கின்றன.

“வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்

துளங்கு தசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்

இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்
திண்டேர் நன்னற்கும் அயினி சான்மெனக்
கண்டோர் மருளக் கடும்புடன் அருந்தி" (கூத்தராற்றுப்படை - 462 - 468)

வாளை மீனோடு கலந்து இறைச்சியும், தெளிந்த கள்ளினையும் மருத நிலத்தில் பெறலாம். மேலும் மருத நில உணவாகிய வெண்சோற்றினையும் விருந்தினருக்கு அளிப்பார்கள். வயல்களில் விளைந்த நெல்லையும், முட்கள் களைந்த வாளை, வரால் முதலிய மீன் வகைகளையும், தெளிந்த கள்ளினையும் உண்ணும் பழக்கமுடையவர்களாக மருத நில மக்கள் இருந்துள்ளமையை இப்பாடலடிகள் எடுத்துரைக்கிறது.

## கூத்தராற்றுப்படை குறிப்பிடும் உணவுப் பழக்கங்கள்

கூத்தராற்றுப்படை மூன்று நிலங்களைக் குறித்த செய்திகளைப் பதிவு செய்துள்ளன. குறிஞ்சி, முல்லை, மருத நிலங்களில் வாழும் மக்களின் உணவு முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் மலையில் விளைந்த கிழங்கு, தேன், தினை, மூங்கிலரிசிச் சோறு போன்றவற்றோடு வேட்டையாடி கொண்டு வந்த பன்றி, கடமான், உடும்பு போன்றவற்றின் தசையினையும் சமைத்து உண்டார்கள். தசையினைப் பொரித்து சாப்பிட்ட செய்தி உள்ளது. அதுமட்டுமன்றி மூங்கில் குழாய்களில் தேனால் செய்து நிரப்பப்பெற்ற கள்ளினையும், நெல்லால் உருவாக்கப்பட்ட கள்ளினையும் உண்ட செய்தி இடம்பெறுகின்றன. புளியும் மோரும் கலந்து உண்ட உணவு முறையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களது தொழில் கிழங்கு அகழ்தல், தேனெடுத்தல், தினை விதைத்தல், வேட்டையாடுதல் என பதிவுசெய்யப்பட்டுள்ளது. தொழிலின் அடிப்படையில் கிடைத்த உணவினை உண்ணுகின்ற நிலையினைக் கூத்தராற்றுப்படை வழியாக அறியமுடிகிறது.

முல்லை நிலத்தில் வாழுகின்றவர்கள் இடையர்கள். ஆநிரை மேய்த்தலை உடையவர்கள். இவர்களது உணவாக பால், பாற்சோறு, கிழங்குகள், நெல்லரிசி, மூங்கிலரிசியை புளிக்கரைத்த உலையிலிட்டு சமைத்த புளியங்கூழ் போன்றவற்றை உண்டனர். புளியங்கூழ் பகலிலும், நெய் கலந்த கறி, நெல்லரிசிச் சோறு, வெல்லம் கலந்த தினைமாவினை இரவிலும் உண்டனர். நெல்லரிசி மருத நிலத்தில் விளைவது. மூங்கிலரிசி குறிஞ்சி நிலத்தில் விளைவது. அதனால் முல்லை நில மக்கள் குறிஞ்சி, மருத நில மக்களுடன் இணைந்து வாழ்ந்ததுவும், பண்டமாற்று முறையில் உணவுபொருட்களைப் பெற்று கொண்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

வயல்களால் சூழப்பட்ட இடம் மருத நிலம் ஆகும். அங்கு வாழ்பவர்கள் உழவர்கள் எனப்பட்டனர். மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் வயல்களில் உள்ள வாளை மீனைக் கறி, கள், முள் நீங்கப்பெற்ற மீன், வெண்சோறு ஆகியவற்றை உண்டுள்ளார்கள் என்ற செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது. செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி ஆகிய உணவுகளை மட்டுமின்றி வயல்களில் உள்ள மீன்களை வலையர்களிடம் நெல்லுக்குப் பதிலாகப் பெற்று உண்டுள்ளார்கள் என்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மருத நில மக்கள் தங்களின் தொழில் அடிப்படையில் கிடைத்த உணவினை உண்டிருக்கிறார்கள் என்பதை கூத்தராற்றுப்படையில் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

## முடிவுரை

உணவு இன்றி மனிதனால் வாழ இயலாது. பண்டைய காலம் முதல் இன்றுவரை மக்களின் வாழ்க்கையில் உணவு மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. நம் முன்னோர்கள் உணவினை மதித்து போற்றியுள்ளார்கள் என்பதை கூத்தராற்றுப்படை வாயிலாக நம்மால் அறியமுடிகிறது. தமிழர்கள் நிலங்களைப் பிரித்ததோடு மட்டுமின்றி அந்நிலங்களுக்கேற்ப உணவுமுறைகளையும் அமைத்துள்ளனர்.

தான் மட்டும் உண்ணாது தனது இல்லம் தேடி வருபவர்களுக்கும் உணவினை பகிர்ந்தளித்து உண்ணும் குணமுடையவராக நம் முன்னோர்கள் இருந்துள்ளமையையும் அறிய முடிகிறது. கூத்தராற்றுப்படையில் மூவகை நிலங்கள் குறிப்பிட்டிருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் அவர்களது நிலத்தில் விளைகின்ற பொருட்களை மட்டுமின்றி பிற நிலத்தின் உணவுகளையும் உண்டுள்ளார்கள் என்ற செய்தி உள்ளது. இதன்மூலம் பண்டமாற்று முறைகள் நிகழ்ந்திருக்கின்றது என்பதும் புலனாகிறது. இதுமட்டுமன்றி அனைத்து நில மக்களும் ஊன்கறியினைப் பெரிதும் விரும்பியிருக்கின்றார்கள் என்ற செய்தியையும் அறிய முடிகிறது. நில அமைப்பினாலும், உண்ணுகின்ற உணவு முறைகளால் வேறுபட்டு காணப்பட்டாலும் உயர்வு, தாழ்வு இன்றி பிறருக்குக் கொடுக்கவேண்டும் என்ற பண்பு அனைவரிடமும் இருந்துள்ளமையை இக்கட்டுரை எடுத்துரைத்துள்ளது.

## References


ஆதிரையார் - சங்கத் தமிழ் நூல்கள் - சுவாமி மலை பதிப்பகம், 2 முத்து கிரு~;ணன் தெரு, தி.நகர், சென்னை - 600017 முதற் பதிப்பு - 1987.

இளம்பூரணனார் உரை - தொல்காப்பியம் - பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3ஸ்ரீ கிரு~;ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 14. 14ஆம் பதிப்பு - 2016.

புலவர். ச. சீனிவாசன், எம்.ஏ, வித்துவான். நா. பழனியப்பன், - வாசன் தமிழ் நீதிச் செல்வம் (நல்வழி - பக்க எண் - 124), சாந்தா ப்பளி~ர்ஸ், முத்துவிழா இல்லம், 13(5) ஸ்ரீ புரம் 2வது தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600014 மூன்றாம் பதிப்பு - 2012.

முனைவர். ச. திருஞானசம்பந்தன், நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு - 613204. முதற் பதிப்பு - நவம்பர் - 2010.

முனைவர். ச. திருஞானசம்பந்தன், ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை, கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு - 613204. முதற் பதிப்பு - டிசம்பர் - 2012.

திருக்குறள் பரிமேலழகர் உரை, பதிப்பாசிரியர் எம்.சாதிக் பா~h, கிளாசிக் பப்ளிகே~ன்ஸ், பிளாட் எண்.21ஃயு இந்திரா நகர், கிஸ்கிந்தா மெயின் ரோடு, பழைய பெருங்களத்தூர், தாம்பரம், சென்னை - 600063. இரண்டாம் பதிப்பு - 2022.

உரையாசிரியர். பெருமழைப்புலவர். திரு. பொ. வே. சோமசுந்தரனார் - மலைபடுகடாம், திருநெல்வேலி தென்னந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்., 522, டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை - 18. பதிப்பாண்டு - 2004.

hவவிள:ஃஃறறற.வயஅடைனபைவையடடிடிசயசல.in (பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் - மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்).

பாரதியார் கவிதைகள் - உமா பதிப்பகம் - 18 (பழைய எண் 171), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை - 600001. முதற்பதிப்பு - மே 2014.

பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு - திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை. பதிப்பு - 1963.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License